

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.கா. கண்ணன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.



‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பிரம்மாண்ட பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் ஆயிரக்கணக்கான கழகத்தினர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் திரண்ட மாபெரும் பொதுக்கூட்டம் !

# “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்”!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

திருச்சி, செப். 22 –

திருச்சி தெற்கு மாவட்டத்தில் தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க மாண்புமிகு கழக தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு முழுவதும் 68,000 மேற்பட்ட வாக்குச்சாவடி சார்பில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தால் முன்மொழியப்பட்டுள்ள

”தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்ற தீர்மான ஏற்ப கூட்டம்

திருச்சி தெற்கு மாவட்டத்தில், திருச்சி பாலக்கரை ரவுண்டானா (மாட்டு ஆஸ்பத்திரி அருகில்) நடைபெற்றது. கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் . பொதுக் கூட்டத்தில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர் .

பொதுக் கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். இனிகோஇருதராஜ், மாவட்ட நிர்வாகிகள் வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், பி.எம். சபியுல்லா, ந.செந்தில், பகுதி செயலாளர் டி.பி.எஸ். எஸ். ராஜ் முகமது, மற்றும் கழக நிர்வாகிகள் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர். கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேருவின் உரை.

இன்று யார் யாரெல்லாம் கழகத்தைப் பற்றியும் கழக ஆட்சியைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அனைத்தையும் தாண்டி இந்தியாவிலே தொழில்துறை முதல் மாநிலமாக வளர்ந்து இருக்கிறது தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சி பெற்று இருக்கிறது எப்படி இந்த ஆட்சி வருவதற்கு முன்பு மக்களின் அடிப்படைத் தேவைகளை பத்தாண்டு காலத்தில் செய்வோம் என சொன்ன தமிழக முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் செய்து காட்டியுள்ளார் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி காட்டி இருக்கிறார் .

இந்தியாவிலேயே நகர வளர்ச்சி நகர வளர்ச்சி பெற்று உள்ளது தமிழகம் தான். ஒன்றிய அரசு நூறு நகரங்களை உருவாக்க வேண்டும் என திட்டமிட்டது அதில் இந்தியாவில் 11 நகரங்கள் தமிழகத்தில் உள்ளது என்று சொன்னால் நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் குடியேறும் அளவிற்கு ஓதிய வசதிகளை செய்து தந்துள்ளோம்.

962001, 200611 கலைஞர் ஆட்சி செய்ததைப் போல யாராலும் ஆட்சி செய்ய முடியாது. அதேபோல் தற்போது தமிழக முதலமைச்சர் 202126 அனைத்து துறைகளிலும் முன்னணியாக தமிழகம் வந்துள்ளது .திமுக யாருக்கும் குறைவானவர்கள் இல்லை என்பதை நிரூபித்து காட்டி இருக்கின்ற ஒரே இடத்திலே திமுக யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை மீண்டும் திமுக தான் ஆட்சிக்கு வரும் என்று நிரூபிக்கின்ற கூட்டமாக இந்த ஓரணியில் தமிழ்நாடு கூட்டம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

தெற்கு மாவட்ட கூட்டம் என்பது தமிழ்நாட்டிற்கு எடுத்துக்காட்டான ஒரு கூட்டமாக அமைந்துள்ளது.

திருச்சியில் உள்ள ஒன்பது தொகுதிகளிலும் திமுக மற்றும் கூட்டணி எள்முனை அளவு கூட குறையாமல் வெற்றி பெறும்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரை ! பாசிச பாஜக மற்றும் அதனோடு கூட்டு வைத்துள்ள அதிமுக கட்சிப் அரசியல் பற்றியும் கர்ச்சீப் அரசியல் பற்றியும் எல்லோரும் பேசுகிறார்கள் தேர்தல் வைத்தால் தோல்வி உறுதி என்பதன் காரணமாக பாரதிய ஜனதா கட்சி தேர்தல் ஆணையத்தை கையில் வைத்துக்கொண்டு வாக்காளர் பட்டியலில் பல்வேறு குளறுபடிகளை செய்து வருகிறது

கீழடி ஆராய்ச்சி குறித்து இரண்டு ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்ட நிலையில் தற்போது வரை பிரதமர் ஒரு வாழ்த்து செய்தி கூட சொல்லவில்லை

தமிழ்நாடு பெருமையை பேச தொடங்கி விட்டால் தமிழ்நாடு சொல்வதை செய்ய வேண்டிய சூழல் வந்து விடும் என்கிற பயம்

என்னுடைய பள்ளிக்கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய 2000க்கும் மேற்பட்ட கோடி ரூபாய் நிதியை தற்போது வழங்காமல் பதுக்கி வைத்துள்ளனர்

அதற்குக் காரணமாக ஏன் இந்தி படித்தால் என்ன அதில் கையெழுத்து போட்டால் நிதி தருவதாக கூறுகிறார் என் கொள்கையை விட்டு பத்தாயிரம் கோடி ரூபாய் நிதியாக இருந்தாலும் அதை வாங்க வேண்டிய அவசியம் இல்லை என தமிழக முதல்வர் கூறுகிறார்

ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழக முதலமைச்சர் 15 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீடுகளை பெற்று வந்துள்ளார் இதன் மூலம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் இப்படி பார்த்து பார்த்து செய்வது மற்றவர்களின் கண்களை உறுத்துகிறது

கல்வி தொழில் முன்னேற்றம் என அனைத்திலும் தமிழகம் சிறந்து விளங்குவதை ஒன்றிய அரசை ஏற்றுக்கொள்கிறது தமிழகம் அறிவார்ந்த விளங்குவதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை அத்தகைய தமிழகத்தை வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசோடு கூட்டு வைக்கும் அதிமுகவிற்கு சூடு சொரணை இருக்க வேண்டாமா

இவர்களுடன் எல்லாம் கூட்டணி வைக்க வேண்டுமா என எதிர்க்கட்சியாகவே இருந்து விட்டு போயிருக்கலாம்.

அத உங்கள் மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை ஒட்டுமொத்தமாக இழந்து விட்டீர்கள் என்றார் .



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் தீர்மான ஏற்பு பொதுக் கூட்டத்தில் சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் நாகேஷ் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றி ”தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி ஏற்றனர். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாநில மாணவர் அணி துணை செயலாளர் தமிழ் அமுதரசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் படத்தில் உள்ளனர்.




வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். – குறள்.

திரு. கே.என்.ராமஜெயம்
அவர்களின்
64வது பிறந்தநாள் விழா
22.09.1961 ■ 29.03.2012



உந்தன் நினைவில் என்றும் நாங்கள்......
கே.என்.நேரு
மற்றும் குடும்பத்தினர்கள்